மாண்புமிகு திரு. செ. மாதவன் : மேற்கண்ட சேலம் மாவட்ட அனுமதி கொடுப்பதை துரிதப்படுத்த உதவும் குழுவின் தீர்மானத்தை தொழில் நடத்த நிர்வாக சீர்திருத்தக்குழு மற்ற தீர்மானங்களோடு பரிசீலித்து குறிப்பிட்ட சில சட்டத்திலிருந்தும், விதிமுறைகளிலிருந்தும் விதிவிலக்கு அளிக்க சிபாரிசு செய்துள்ளது. நிர்வாக சீர்திருத்தக் குழுவின் மேற்படி சிபாரிசுகளை அரசு ஒப்புக்கொண்டு அரசு ஆணை நிலை எண் 511 (தொழில்) தேதி 26—3—1973-ல் ஒருசில சிபாரிசுகளை செயலாக்க உத்தரவு பிறப்பித்துள்ளது.

கைவினைப் பொருள்கள் வளர்ச்சிக் கழகம்

* 173 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன்:

திரு. ரா. ரா. முனுசாமி: மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கைவினைப் பொருட்களுக்காக கார்ப்பரேஷன் ஒன்று துவக்கும் திட்டம் ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தமிழ்நாடு கைவினைப் பொருள்கள் வளர்ச்சிக் கழகம் 1—8—1973-ம் தேதி பதிவு செய்யப்பட்டுள்ளது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, இந்தப் பதிவுக் கழகத்தைப் பதிவு செய்த பிறகு மேற்கொண்டு எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் விபரம் அறியலாமா? அது எப்பொழுது செயல்படும்?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இப்பொழுதே செயல்படத் துவங்கியிருக்கிறது. இது சம்பந்தமாக ஒவ்வொரு மாவட்டத்திலும் அவர்கள் பணிகளைத் தொடங்க வேண்டுமென்றும், ஒவ்வொரு மாவட்டத் தலைநகரத்திலும் அவர்களுடைய விற்பனைக் கூடத்தை அமைத்து, உற்பத்தியாகும் பொருள்களை வாங்கி விற்க வேண்டுமென்றும் அரசு முடிவெடுத்துள்ளது.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : தலைவரவர்களே, இந்த கார்ப்பரேஷனில் இருக்கும் அங்கத்தினர்கள் யார் யார்? அவர்கள் இதுவரையில் என்ன சிபாரிசுகளைச் செய்திருக்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இப்பொழுதுதான் போடப்பட்டிருக்கிறது. இது 'அட்டானமஸ் கார்ப்பரேஷன்' என்ற முறையிலே அவர்கள் நடவடிக்கை எடுப்பார்கள். கீழ்க்கண்டவர்கள் அங்கத்தினர்கள் :—

Director of Industries, Deputy Sceretary, Finance, Deputy Secretary, Industries, a representative of the All-India Handicrafts Board, a representative of the Handicrafts Industrial Co-operative Society, a representative of the Artisans and a Member of the Legislative Assembly.

உப்பு உற்பத்தி

* 174 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் நவீன முறையில் உப்புத் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றினை அமைக்கும் திட்டம் ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) ஆம்.

(இ) தமிழ்நாட்டில் முகவை மாவட்டத்தில் மாரியூர் சதுப்பு நிலத்திலும் செங்கல்பட்டு மாவட்டத்தில் கோவளம் பகுதியிலும், நெல்லை மாவட்டத்தில் வைப்பார்-வேம்பார் பகுதியிலும் தூத்துக்குடி துறைமுகத்திற்குத் தென் பகுதியிலும் பெரிய உப்பளங்கள் நவீன முறையில் அமைக்கும் திட்டங்கள் பரிசிலனையில் உள்ளன.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, இந்தத் திட்டங்களுக்கு எவ்வளவு ரூபாய் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: முதலீடு பற்றிய விவரம் தற்பொழுது இல்லை.

தீப்பெட்டி தயாரிக்கும் தொழிற் பிரிவுகளுக்கு உதவி

* 175 வினா.—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் தீப்பெட்டித் தொழிலை ஊக்குவிக்க அரசு மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தமிழ்நாட்டில் கையால் தீப்பெட்டி தயாரிக்கும் தொழிற்சாலைகள் ஏறத்தாழ ஆயிரம் உள்ளன. சிம்புகள்—மருந்து பூசிய பாகங்கள், நீலநிற தீப்பெட்டிக் காகிதம், திக்குச்சி, மெழுகு,